**செ. கு. எண்**: 34 **நாள்**: 31.012013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 31.1.2013

நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையம் மற்றும் விரிவாக்கப்பட்ட சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் பணிகள் 2,015 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இதனை மேதகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் 31.1.2013 அன்று துவக்கி வைக்கவுள்ளார் என்றும் தெரிவித்து, இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு மாண்புமிகு மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. அஜீத் சிங் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். இந்த அழைப்பினை ஏற்று, இந்த விழாவில் கலந்து கொள்வதாக நான் தெரிவித்திருந்தேன்.

தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவராகவும், தமிழக மக்களின் இதயங்களில் இன்றளவும் வீற்றிருக்கக் கூடியவராகவும், மக்களை தன்பால் ஈர்க்கும் சக்தியைக் கொண்டவராகவும், ஏழைகளின் ஏந்தலாகவும் விளங்கியவர் முன்னாள் தமிழக முதலமைச்சர் “பாரத ரத்னா” புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். அன்னாரின் பெயரை புதிதாக திறக்கப்படவுள்ள நவீன உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு வைக்க வேண்டும் என்றும், இதற்கு தமிழக மக்களின் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்றும் தெரிவித்து, இந்த விமான நிலையத்தை திறப்பதற்கு முன்பு இது குறித்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. அஜித் சிங் அவர்களுக்கு நான் கடிதம் வாயிலாக கேட்டுக் கொண்டேன்.

இது குறித்து எந்தவிதமான அறிவிப்பும் வராத சூழ்நிலையில், இந்த நவீனமயமாக்கப்பட்ட உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தினை திறந்து வைக்க மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. அமீத் அன்சாரி அவர்கள் இன்று சென்னை வருகை புரிந்துள்ளார்.

தமிழகத்திற்கு வருகை புரியும் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களை முதலமைச்சர் வரவேற்பது அரசு மரபு என்பதால் அவரை விமான நிலையம் சென்று நான் வரவேற்றேன். அதே சமயத்தில், புகழ் வாய்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு வைக்க வேண்டும் என்ற எனது வேண்டுகோளுக்கு சாதகமான பதில் வராதது எனக்கும், தமிழக மக்களுக்கும் ஆழ்ந்த வேதனையை அளித்துள்ளதால், சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனைய துவக்க விழாவில் நான் கலந்து கொள்ளவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் “பாரத ரத்னா” புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை சூட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9